பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය - පරිපාලන
Office of the Deputy Chief Secretary - Administration

மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කෛතඩි
Council Complex, A9 Road, Kaithady

எனது இல / මගේ අංකය / My No NP/02/14/GN/38/2023

Date: 2022.06.22

பிரதம செயலாளர்,
கௌரவ ஆளுநரின் செயலாளர்,
செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
செயலாளர், பேரவை செயலகம்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் - 2023**

மேற்படி விடயம் தொடர்பாக 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் XVIII ஆகியவற்றின் ஏற்பாடுகளைத் தழுவி கௌரவ ஆளுநர் அவர்களால் 2021.07.13ம் திகதியில் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண இணைந்தசேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கைக்கமைய 2023ம் ஆண்டிற்கான பின்வரும் இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைந்த சேவைகள் தொடர்பில் வருடாந்த இடமாற்றங்கள் 2023.01.01ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை
2. மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை (III/II/I)
3. இலங்கை தொழில்நுட்பவியல் சேவை (தொழில்நுட்ப உத்தியோகத்தர் / மின்னியலாளர் / படவரைஞர்)
4. மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை
5. அலுவலகப் பணியாளர் சேவை

**03.** இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கீழ்குறிப்பிடும் மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்க தயாரிக்கப்படும் இடமாற்றத்திற்கான விண்ணப்பமானது திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- இடமாற்றத்தினை எதிர்பார்க்கும் / தகைமை பெற்றுள்ள அலுவலகர்களால் நிரப்பப்படும் விண்ணப்பப்படிவம் (Form/CS/ATR/01) – பின்னிணைப்பு I)
- வருடாந்த இடமாற்றங்களை கோரும் அலுவலகர்களின் சேவைக்கால ஒழுங்கில் விண்ணப்பங்களின் பட்டியல் (Form/CS/ATR/02) – பின்னிணைப்பு II)
- தற்போதய சேவை நிலையத்தில் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்தும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத அலுவலகர்களின் சேவைக்கால ஒழுங்கிலான பட்டியல் (Form/CS/ATR/03) – பின்னிணைப்பு III)

**04.** வருடாந்த இடமாற்ற கட்டளையை பெற்ற எல்லா உத்தியோகத்தர்களும் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்காக அறிக்கையிடும் பொறுப்பை கொண்டுள்ளனர். எனவே இடமாற்றத்திற்குத் தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் கடமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்க அவர்களை விடுவிக்கவும் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary
Tel : 021 223 2351 (Dir)
: 021 222 0960 (Gen)
Fax : 021 222 0950
E-mail :ppas.np@gmail.com

05. இவ் இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக தங்களது அமைச்சின் /திணைக்களத்தின் மற்றும் அவற்றின் கீழ்வரும் அலுவலகங்களிலும் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத்தருவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அட்டவணைப்படுத்தி விண்ணப்பங்களுடன் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகத்திற்கு **2022.07.30ம்** திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

- **குறிப்பு 1** : தங்களால் முன்னளிக்கப்படும் இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்ற விண்ணப்பங்களுக்குரிய அட்டவணைகள் (பின்னிணைப்பு II, III) **கடமையாற்றிய கூடிய சேவைக்கால முதுமுறை ஒழுங்கில் பட்டியலிடப்பட்டு** சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன் மென்பிரதி எமது மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படுதல் (ppas.np@gmail.com) வேண்டும்.

- **குறிப்பு 2** : உத்தியோகத்தர்களின் இடமாற்ற விண்ணப்பப் படிவங்களில் திணைக்களத்தலைவர்கள் குறித்த உத்தியோகத்தர்களின் சேவையின் அவசிய தேவை பற்றி தமது பரிந்துரைகளை குறிப்பிடுதல் அவசியமாகும். அவ்வாறான பரிந்துரைகள் இடமாற்ற மீளாய்வின் போது பரிசீலிக்கப்படலாம்.

- **குறிப்பு 3** : 2022ம் வருடத்திற்கான இடமாற்றக்கட்டளை பிற்போடப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இதுவரை இடமாற்றக்கட்டளைக்கு அமைய இடமாற்றம் வழங்கப்பட்ட சேவை நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்காத உத்தியோகத்தர்கள் 2023ம் வருடத்திற்கான இடமாற்ற விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படலாகாது.

- **குறிப்பு 4** : தற்போதய சேவை நிலையத்தில் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்தும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத அலுவலர்களது விபரங்கள் பின்னிணைப்பு III இல் திணைக்களத்தலைவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அத்தகைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரிப்பெறுவது அவசியமற்றது.

*பொ.குகநாதன்*
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
வடக்கு மாகாணம்


பிரதம செயலாளர்
ප්‍රධාන ලේකම්
Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
Deputy Chief Secretary
Tel : 021 223 2351 (Dir)
: 021 222 0960 (Gen)
Fax : 021 222 0950
E-mail :ppas.np@gmail.com